ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2423/36 - 2025 පෙබරවාරි මස 15 වැනි සෙනසුරාදා - 2025.02.15

*2423/36 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பீ 17/2016*

MOD/DEF/HRM/01/AMD/REG

**(359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டம்**

(359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் 29 ஆம் மற்றும் 155 ஆம் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**அநுர குமார திசாநாயக்க,**
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2025, சனவரி 12.*

**ஒழுங்கு விதிகள்**

1989 ஆம் ஆண்டு சனவரி மாதம் 7 ஆந் திகதிய 539/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் இலங்கை வான்படை மகளிர் பக்க அணி (கிரமமான கிரம ஒதுக்குப்படை) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:

(1) 20 ஆம் ஒழுங்குவிதியின் (4) ஆம் உப ஒழுங்குவிதியில் “நாற்பத்தைந்து வயதை அடைவதன்மேல் அல்லது இருபதாண்டுகளைக் கொண்ட ஆகக்கூடிய காலப்பகுதியொன்றுக்குச் சேவைபுரிவதன்மேல், இவற்றுள் எது முன்னராக நிகழ்கின்றதோ அதன்மேல்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஐம்பத்தைந்து வயதை (55) அடைவதன் மேல் அல்லது இருபதாண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றினை அடைவதன் மேல்,” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

1A - G 43752 — 06 (2025/02)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) 21 ஆம் ஒழுங்குவிதியில் "அத்தகைய குறுகிய காலப்பகுதிக்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக "அறுபது வயதை (60) அல்லது அத்தகைய குறுகிய காலப்பகுதிக்கு" எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) 35 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் உப ஒழுங்குவிதியில் "இருபதாண்டுகளைக் கொண்ட ஆகக்கூடிய காலப்பகுதியொன்றுக்குச் சேவைபுரிந்ததன் மேல் இவற்றுள் எது முன்னராக நிகழ்கின்றதோ அதன்மேல்" எனும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்திரெண்டு (22) ஆண்டுகள் எனும் காலப்பகுதியின்மேல்" எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

EOG 02-0135

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.